

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## 'கல்வாரி அன்பின்' நற்செய்தி கேளீர்!

தன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை சிதைக்கப்பட்டு இரணகளமாய் சிலுவையில் தொங்கிய இயேசுவைப் பாருங்கள்! "அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" என்றே ஏசாயா.53:2 கூறுகிறது. ஆனால், 2 நாள் முடிந்து 3-ம் நாளில் "தழும்புகளுடன்" உயிர்த்த இயேசுவின் மகிமை கெம்பீரத்தையும் பாருங்கள்! நம்போன்ற மாம்சத்தில் வந்து, எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டு, அவரது மாம்சம், சுயம், உலகம்.... அவர் அறிமுகம் செய்த சிலுவையில் சிதைக்கப்பட்ட கோலமே இந்த கல்வாரி காட்சி!

இந்த 'கல்வாரி அன்பைக்' கண்டு, தன் சிலுவை எடுத்து குருவைப் பின்பற்றுபவர்கள் அடைவதே "மகிமையான, கிறிஸ்துவின் பூரண அழகின் அவரது சாயல்!" ஆ, இதுவே இயேசுவின் மகிமையான சுவிசேஷம்! இந்த நற்செய்தியை விசுவாசிப்பவர்கள் வெகு சிலரே! (ஏசாயா.53:1).

*-tr*

பெட்டகம் 20 | மார்ச் 2018 | பரல்கள் 3




## கிறிஸ்துவின் இராணுவத்தில் பெற்றிடும் ஜெய வாழ்க்கை!

யுத்தத்தில் எதிரிகள் மீதே குறியாயுள்ள போர்ச்சேவகன், தன் பிழைப்பிற்கடுத்த மற்றும் தன் குடும்ப அலுவல்களில் சிக்கிக்கொள்ளாமல் அதிலிருந்து விடுதலையாயிருப்பான்! அதே போல், நமக்கு ஏற்படும் 'சூழ்நிலைகளுக்குள்' நாம் சிக்கிக்கொள்ளாமல், அந்தப் போரில் எதிரியாகிய "தன் சொந்த சுயத்தை அழிப்பதற்கே இயேசுவின் போர்ச்சேவகன் குறியாய் இருக்க வேண்டும். ஆனால் காரியம் என்னவென்றால், இந்த கிறிஸ்தவ ராணுவத்தில் (தண்டில்) சேவகம் செய்திட தங்கள் பெயரை பதிவு செய்து கொண்ட 'சீஷர்களில்' அனேகர், தங்களுக்கு ஏற்படும் சூழ்நிலையில், "எதிரியாகிய தன் சுயத்தை" அழிப்பதற்குப் பதிலாக..... அதாவது, "கிறிஸ்துவின் பாடுகளுக்குள்" பிரவேசித்து வெற்றி சிறக்க வேண்டிய இந்த இயேசுவின் வீரன், சூழ்நிலைகளின் பாடுகளுக்குள் சிக்கிக் கொள்ளுகிறான்!! (2தீமோ.2:3,4). இவர்கள் "சிலுவை" என கூறுவதெல்லாம் வெளியே உள்ள "மனுஷரையும்" "சூழ்நிலைகளையுமே" சிலுவை என கூறுகிறார்கள்! "தன் சுயம் ஒழிக்கும், தன் சிலுவையை" இவர்கள் இன்னும் காணவில்லை!

இன்று மானிடர்கள் "பக்தி" என கொண்டாடும் வெளிப்புற சரீர ஒடுக்கம் மிக அற்பமானது! (1தீமோ.4:8). அதற்கொன்றும் தேவ கிருபை தேவை இல்லை! கடினம் கொண்ட சுயம், கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் "அவரின் பாடுகளுக்கு" உட்பட்டு மரிப்பதற்கே ஒருவன் கிருபையில் பலப்பட வேண்டும்! (2தீமோ.2:1). "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை" என சூழ்நிலையில் 'சிக்கி ஒடுங்கிப்போகாதவர்களே' தேவ கிருபையில் பலப்பட்டு, தங்கள் சுயத்தை சிலுவையில் அறைந்து, தங்கள் 'மண்பாண்டத்தில்' கிறிஸ்துவின் மகிமையை நாளுக்குநாள் சேர்த்து வைத்து மகிழ்வார்கள்! (2கொரி.4:7,8).

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

**2018 'பரலோக பொக்கிஷங்கள்'** வருட சந்தா ரூ.**140**/- M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி! புதுப்பிக்காதவர்கள் **ஏப்ரல் 15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120**/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.**800**/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக்கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## நான் மதித்து பின்பற்ற உகந்த பிரசங்கிகள்!

"என்னை பின்பற்றுங்கள்!" என்றே இயேசு கூறினார் (லூக்கா.9:23).

"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னை பின்பற்றுங்கள்!" என்றார் பவுல். (1கொரி.11:1;பிலி.3:17). ஒவ்வொரு பக்தியுள்ள பிரசங்கிகளும், **யாருக்கெல்லாம் பிரசங்கிக்கிறார்களோ அவர்களிடம் என்னகூற வேண்டுமென** பரிசுத்தாவியானவர் எதிர்பார்க்கும் 'திராணியை' பவுலின் வார்த்தைகளில் காண்கிறோம்.

அனேக பிரசங்கிகள், "என்னை பின்பற்றாதீர்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்" என்றே கூறுகிறார்கள். இது கேட்பதற்கு மிக தாழ்மையாய் தோன்றினாலும், அது அவர்களின் தோற்றுப்போன ஜீவியத்தை மூடிமறைக்கும் செயலாகவே உள்ளது. இவர்களின் கூற்று, மேலே கூறப்பட்ட பரிசுத்தாவியின் போதகத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்!

எந்த பிரசங்கிகள் "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதைப் போல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்!" என கூற முடிகின்றதோ, அவர்களை மாத்திரமே நான் மதித்து பின்பற்றுகிறேன்! துயரம் என்னவென்றால், அதுபோன்ற பிரசங்கிகள் நம் நாட்களில் அபூர்வமாகவே இருக்கிறார்கள்.

பவுல் மனம் மாறுவதற்கு முன்பாக, முற்றிலும் தோற்கடிக்கப் பட்டவராய் இருந்தார். இருப்பினும் தேவன் அவரை மாற்றி, அவர் பூரணராய் இல்லாவிட்டாலும், மற்றவர்கள் பின்பற்றக் கூடிய ஓர் மிகப்பெரிய **மாதிரியாய் உருவாக்கினார்** (பிலி.3:12-14). இந்த உலகத்தில் உள்ள தலைசிறந்த கிறிஸ்தவன் கூட, பூரணத்தை நோக்கி இன்னமும் முன் செல்கிறவரே அல்லாமல், பூரணர் அல்ல!

ஆகவே, கடந்த காலத்தில் நீங்கள் முற்றிலும் தோற்கடிக்கப் பட்டவராய் இருந்தாலும், தேவன் உங்களையும், மற்றவர்கள் பின்பற்ற உகந்த ஓர் மாதிரியாய் மாற்றிட முடியும்.

ஒரு பிரசங்கியை நான் மதித்து, அவரைப் பின்பற்றக்கூடிய மாதிரியாய் நான் பார்ப்பதற்கு விரும்பும் ஏழு குணாதிசயங்கள் உண்டு:

1. அவர், எளிதில் மற்றவர்கள் அவரிடத்தில் வரும்படியான தாழ்மையுள்ளவராய் இருக்க வேண்டும்!

*இயேசு, மற்றவர்கள் எளிதில் அவரை நெருங்கக் கூடிய தாழ்மையுள்ளவராய் இருந்தார் (மத்.11:29). எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் ஜனங்கள் அவரிடத்தில் எளிதாய் போக முடிந்தது. நிக்கொதேமு, இயேசுவின் வீட்டில் அவரை நடு இராத்திரியில் எளிதாய் சந்திக்க முடிந்தது! பொது இடங்களில், இயேசுவிடம் எந்த நேரத்திலும் யார் வேண்டுமானாலும் பேச முடிந்தது! 'இயேசுவின் தாழ்மையே' தரித்திரருக்கு சுவிசேஷத்தை ஆர்வமுடன் பிரசங்கித்திட தகுதிப்படுத்தியது (லூக்கா.4:18). தன் தவறை துரிதமாய் அறிந்து, அதற்காக உடனே மன்னிப்பு கேட்க கூடிய தாழ்மையுள்ளவராய் இருந்தார் பவுல் (அப்.23:1-5). இவ்வாறு, பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் பாராமல், தங்களைக்குறித்து யாதொரு 'மேன்மையான எண்ணமும்' இல்லாமல், தங்கள் தவறுகளுக்கு உடனே மன்னிப்பு கேட்டு* **எப்போதும் சாதாரண சகோதரர்களாய்** *நிலைத்திருக்கும் பிரசங்கியை மாத்திரமே நான் பின்பற்ற விரும்புகிறேன்!*

2. அவர், தனக்காகவோ அல்லது தனது ஊழியத்திற்காகவோ ஒருவரிடமும் ஒருபோதும் பணத்தை கேட்காதவராய்! எளிய வாழ்க்கை கொண்டவராய் இருக்க வேண்டும்!

*ஒருவேளை அவர் பணத்தை வாங்கி இருந்தாலும், அதை பவுல் அவ்வப்போது வாங்கியதைப் போல 'மனப்பூர்வமான காணிக்கையாய்' இருந்திருக்க வேண்டும் (பிலி.4:16-18). ஆகிலும், பவுல் தன்னை விட ஏழையாய் இருந்த ஒருவரிடமும் அவ்வாறு பணம் பெறவில்லை! தன்னைவிட வசதியானவர்களிடமிருந்தே அவ்வித காணிக்கைகளைப் பெற்றார். இயேசு தனக்காகவோ அல்லது தன் ஊழியத்திற்காகவோ யாரிடத்திலும் ஒருபோதும் பணம் கேட்டதில்லை. அவரைவிட அதிக ஆஸ்தி கொண்டவர்களிடமிருந்து மாத்திரமே காணிக்கைகளைப் பெற்றார் (லூக்கா.8:3). இயேசுவும், பவுலும் மிக எளிய வாழ்க்கை தரத்தை கொண்டிருந்தார்கள். இவ்வாறு, பணத்தின்மீதும் உலகப் பொருட்களின் மீதும் இயேசுவும் பவுலும் கொண்டிருந்த மனப்பான்மையுடைய பிரசங்கிகளை மாத்திரமே நான் பின்பற்றுவேன்!*

3. அவர், ஒரு தேவ மனிதன் என்ற சாட்சி பெற்றவராய் இருக்க வேண்டும்!

*ஓர் பக்தியுள்ள, பரிசுத்தத்தின் மீது பேராவல் கொண்ட*

நேர்மையாளனாய் அவர் இருக்க வேண்டும். அவர் தனக்காக யாதொன்றையும் தேடாமல், தன் நாவை அடக்கி வைத்திருப்பவராய் இருக்க வேண்டும் (யாக்கோபு.1:26, எபேசியர்.4:26-31). அவர், தோல்வியடைந்தவர்களுக்கு இரக்கம் செய்கிறவராயும், தன் ஜெபத்தையோ, தன் உபவாசத்தையோ அல்லது தன் ஈகையையோ குறித்து ஒருபோதும் பெருமை பாராட்டாதவராய் இருக்க வேண்டும் (மத்தேயு.6:1-18). கொஞ்ச வயதானவர்களோ அல்லது அதிக வயதானவர்களோ ஆகிய எல்லா ஸ்திரீகளிடமும் 'முழுமையான பரிசுத்தம் கொண்ட' சாட்சியுடையவராய் எப்போதும் இருக்க வேண்டும் (1தீமோ.5:2). இவ்வாறு தங்கள் ஜீவியத்தில் 'தேவ பக்தியின் நறுமணம் கொண்ட' பிரசங்கிகளை மாத்திரமே நான் பின்பற்றுவேன்!

4. **அவர், தன் பிள்ளைகளை தேவ பக்தியின் வழியில் வளர்த்தவராய் இருக்க வேண்டும்!**

அவர், கிறிஸ்துவை பின்பற்றுகிறதைப் போலவே, அவருடைய பிள்ளைகளும் 'அவரைப்' பின்பற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும். முதலாவது, தன் சொந்த பிள்ளைகளை தேவபக்தியில் நடத்தவில்லையென்றால், ஒரு சபையை முன் நடத்தும் தலைவனாய் இருந்திட முடியாது என பரிசுத்தாவியானவர் கூறுகிறார் (1தீமோ.3:4,5; தீத்து.1:6). வீட்டில் நம்முடைய பிள்ளைகளே நம்மை எப்போதும் காண்கிறபடியால், மற்றவர்களைவிட நம் பிள்ளைகளே நம்மை அதிகமாய் அறிந்திருப்பார்கள். வீட்டில், நாம் பக்தியான வழியில் வாழ்வதைக் காணும் அவர்களும், கர்த்தரை முழு இருதயமாய் பின்பற்றுவார்கள்! இவ்வாறு, பக்தியிலும், தாழ்மையிலும், எல்லா ஜனங்களையும் மதித்து நடப்பதிலும், தங்கள் பிள்ளைகளை வளர்த்த பிரசங்கிகளை மாத்திரமே நான் பின்பற்றுவேன்!

5. **அவர், தேவனுடைய முழு ஆலோசனைகளையும் அச்சமின்றி பிரசங்கிக்கிற வராய் இருக்க வேண்டும்!**

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட எல்லாவற்றையும் பிரசித்தம் செய்கிறவராய், எந்த மனிதனையும் பிரியப்படுத்த விரும்பாமல், ஒவ்வொரு கட்டளைகளையும், ஒவ்வொரு வாக்குதத்தத்தையும் அறிவிப்பவராயும் இருக்க வேண்டும் (அப்போஸ்தலர்.20:27, கலாத்தியர்.1:10). அவர் மெய்யாகவே, பரிசுத்தாவியினால்

*தொடர்ச்சியாக அபிஷேகம் பண்ணப்பட்டவராய் இருந்தால், இயேசுவைப் போலவும் பவுலைப்போலவும், அவரது செய்திகள் எப்போதும் 'சவால் நிறைந்ததும் உற்சாகம் தருவதாயும்' இருந்திருக்க வேண்டும்! இவ்வாறு, அவர்கள் பேசும்போது* **'தேவனுடைய அபிஷேகத்தை'** *அவர்களில் இருப்பதை நான் உணர்ந்தால், அதுபோன்ற பிரசங்கிகளை மாத்திரமே நான் பின்பற்றுவேன்!*

6. **அவர், ஸ்தல சபைகளை கிறிஸ்துவின் சரீரத்தின் பிரதிபலிப்பாய் இருக்கும் படி கட்டுவதற்கு பேரார்வம் கொண்டவராய் இருக்க வேண்டும்!**

*ஜனங்களின் எல்லா பாவங்களிலிருந்தும் இரட்சிப்பதற்காக மாத்திரமே இயேசு வராமல்,* **அவருடைய ஜீவனை வெளிப்படுத்தும்** *ஓர் சரீரமாக அவரது சபையை கட்டுவதற்கும் இயேசு இந்த பூமிக்கு வந்தார்! (மத்தேயு.16:18). அவ்வாறு எல்லா இடங்களிலும் கிறிஸ்துவின் சரீரமாய் செயல்படும் ஸ்தல சபைகளை ஸ்தாபிப்பதற்கே பவுல் பேரார்வம் கொண்டிருந்தார் (எபேசியர்.4:15,16). இந்த இலக்கை அடைவதற்கே, அவர் கடினமாய் பாடுபட்டார் (கொலோ.1:28,29). இவ்வாறு, கிறிஸ்துவின் சரீரத்தின் பிரதிபலிப்பாய் இயங்கும் ஸ்தல சபைகளை கட்டுவதற்கு வாஞ்சை நிறைந்த பிரசங்கிகளை மாத்திரமே நான் பின்பற்றுவேன்!*

7. **அவர், 'தன்னைப் போன்ற தரிசனமும் ஆவியும் உடைய' குறைந்தது சில உடன் ஊழியர்களையாவது எழுப்பி இருக்க வேண்டும்!**

*ஒரு தேவ பக்தியான பிரசங்கி, கர்த்தருடைய தூய்மையான சாட்சி,* **அடுத்த சந்ததிக்கும்** *பாதுகாக்கப்பட எப்போதும் கரிசனை கொண்டவராய் இருக்க வேண்டும். இயேசுவால் எழுப்பப்பட்ட 11 சீஷர்களும் அவரது ஆவியை முழுமையாய் பருகி, அவருடைய உயர்ந்த தரத்தின்படி வாழ்ந்து, கர்த்தரின் பணியை சீரும் சிறப்புமாய் மேற்கொண்டார்கள். பவுல் மூலமாய் எழுப்பப்பட்ட தீமோத்தேயும், தீத்துவும்,* **தாழ்மையின் ஆவியில்** *வாழ்ந்தவர்களாய், பவுலின் ஊழியத்தை சுய நலம் ஏதுமில்லாமல், தொடர்ச்சியாய் செய்தார்கள் (பிலி.2:19,21; 2கொரி.7:13-15). இவ்விதமான தரம் கொண்ட, குறைந்தது சில உடன் ஊழியர்களையாவது உருவாக்கிய பிரசங்கிகளை மாத்திரமே நான் பின்பற்றுவேன்!*

*நீங்கள் ஒரு பிரசங்கியாய் தேவனால் அழைக்கப்பட்டிருந்தால்,*

அவர் தம்முடைய **பரிசுத்தாவியினால்** உங்களை தொடர்ச்சியாக அபிஷேகித்திட ஜெபம் செய்திட வேண்டும். அதன் மூலமாய், மேலே குறிப்பிடப்பட்ட எல்லா திவ்விய தரங்களையும் உடையவர்களாய், மற்றவர்கள் பின்பற்ற உகந்த ஓர் மாதிரியாய் மாறிட வேண்டும்!

ஒத்த வேஷத்தாலும், உலகத்தாலும் கறைப்பட்ட இன்றைய கிறிஸ்தவத்தில், நாமோ ஜீவியத்திலும் ஊழியத்திலும் உன்னத தரம் கொண்ட சபையை எழுப்புவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்! அந்த பணி நிறைவேற்றிட ஆண்டவர் நமக்கு உதவுவாராக! ஆமென்.

– சகரியா பூணன்

---

## 'என் சுயத்தை தப்பவிடாத' தெய்வ அன்பு!

**அ**ன்பான மகளின் துயரமான பிரிவை அடுத்து, இப்போது என் மகன் மாத்திரமே என்னோடு இருந்தான். அவனும்கூட மரணத் தருவாயில் வியாதிப்பட்டு இருந்தான். அச்சமயம் அங்கு வந்த கிரங்கர் அம்மையாரின் ஊக்கமான ஜெபத்தால் அவன் சுகம் பெற்று எழுந்தான். என் துயர நேரத்தில், தேவனால் அனுப்பப்பட்டதுபோல் கிரங்கர் அம்மையார் என்னிடம் வந்து, மிகுந்த ஆவிக்குரிய ஆறுதலையும் உற்சாகத்தையும் தந்தார்கள். என் தந்தையின் மரணத்தில், வெகுவாய் துக்கமடைந்து அழுதேன். ஒரு சில மணி நேரத்தில் என் மகள் மரித்த அதிர்ச்சி ஏற்பட்டாலும், தேவனுடைய கரம் என் இருதயத்தை ஸ்திரப்படுத்தியபடியால், "ஓ கர்த்தாவே! என் இனிய மகளை நீரே எனக்குத் தந்தீர்! அவளை உம்மிடம் மறுபடியும் சேர்த்து கொள்வது உமக்கு பிரியமாய் இருந்தது. அவள் என்றும் உம்முடையவள்!" என்று நான் ஏறெடுத்த ஜெபம் என் நேசரின் பாதத்திற்கு சென்றடைந்தது என கண்டு, ஆறுதல் அடைந்தேன். நான் இழந்த என் தந்தையும் அதிக விசுவாசமும், ஆச்சரியமான பொறுமையும் கொண்டவர்.

> **ஒரு இளவரச வாழ்க்கை வாழ்ந்தாலும், அவரோ தேவனையே முற்றிலுமாய் சார்ந்து .... தேவனுக்கு முன்பாக தன்னை ஒரு ஏழையைப் போல் வைத்து, அவரையே நம்பி வாழ்ந்தார்! அவர் எங்களோடு இருந்தது, என் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு 'ஓர் அடிமரத்தைப்போல்' இருந்தது!**

இதுமுதற்கொண்டு, ஏராளமான சிலுவைகள் என்னை நெருங்கி வந்தது! அவை அனைத்தும், நான் ஏற்கெனவே கடந்துச் சென்ற சிலுவையின் நிழல்களைப்போலவே கண்டேன். என் நேசரோடு நான் கொண்ட 'ஆவிக்குரிய திருமணத்தில்' அவர் எனக்கு வழங்கிய வரதட்சணைகளைப்போல் பல்வேறு சிலுவைகளைக் கண்டேன்!

துன்பங்களும், இழிவு செய்யப்படும் நிகழ்ச்சிகளும், சிறுமைப்படுத்தப் படுவதும் ஆகிய அனைத்தும் **என் சுயத்தை வெறுமையாக்கும்படி 'நேசர் எனக்களித்த' பொக்கிஷ வரதட்சணைகளாய் கண்டேன்.** ஆம், மெய்யாகவே தேவன் என்மீது அளவில்லாத பிரியம் கொண்டு, எனக்கென்று அவர் அளித்த 'தெய்வ தயவாகவே' அனைத்தும் என்மீது பொழிந்து என்னை ஆசீர்வதித்தது!

ஒருநாள், எனக்குள்ளும் எனக்கு வெளியேயும் சிலுவை இரட்டிப்பாய் எனக்கு வந்து சேர்ந்ததினிமித்தம் சிறிது மனம் தளர்ந்தேன்! ஒருவேளை, என் துயரத்திற்கு சற்று இளைப்பாறுதல் கிடைக்குமோ என விரும்பி என் தனி அறைக்கு சென்றேன். அந்த நேரத்தில் அன்று என்னை சந்தித்த பெர்டாட் பரிசுத்தவான் கூறிய வார்த்தைகள் எனக்கு விடையாய் வந்தது: "ஒருவன் கிறிஸ்துவுக்குள் பாடுபடுவது, மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியான உணர்வுகளாய் ஒருபோதும் இருந்திட கூடாது!" என்ற அவரது வாக்கியம் என்னை அமைதிப்படுத்தியது.

**மெய்யாகவே, சிலுவையின் வழியில் நான் அடைந்திடும் இன்னல்களை மற்றவர்கள் பரிதாபமாய் உணரும்படி செய்வது.... சிலுவையின் வெற்றி அல்ல, அது தோல்வி என உணர்ந்தேன்!**

அவர் கூறியது எவ்வளவு நேர்த்தியும் உண்மையுமாய் இருக்கிறது. ஏனெனில், அனுதின தொடர்ச்சியான சிலுவையின் பாதையில், ஏதாகிலும் 'மனஆறுதல்.... இடைவெளி' உண்டா? என்றே என் கண்கள் அலைமோதியது. தேவன் என்னை செம்மையான பாதையில் நடத்திய படியால் **'மனுஷீகமான யாதொரு ஆறுதலும்'** எனக்கு அருளப்படவில்லை. அவ்வளவு அதிகமாய் தெய்வ அன்பு என்னை பலமாய் நெருக்கி, என் சுயத்திற்கு யாதொரு ஆதரவும் போஷாக்கும் கிடைக்காதபடி, கேடான என் சுயத்தை அழித்திட வகை செய்தார்!

"என்னை அலாதி நேசத்தால் நேசித்த என் கர்த்தாவே! நீர் எனக்கு தந்த ஆதரவெல்லாம், என் ஆத்துமாவில் நான் கண்ட கெம்பீர ஜெயமே ஆகும். என் பெலஹீன சுபாவமான சுயத்தை, நீர் கவனமாய் சுற்றி வளைத்து, **அதை சிறிதும் தப்பவிடாமல்** உமது கூர்வாளால் அழித்ததற்காக உமக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்றே என் உளமாற நன்றியை கூறி, அவர் பாதத்தை கண்ணீரால் நனைத்தேன்! ஆகிலும் மாறுபாடாய் நடக்க விரும்பும் சுயத்தின் சுபாவம் 'தன் ஜீவனை பாதுகாத்திட' ஒவ்வொரு இடுக்கண் நேரத்திலும் தீவிரமாய் எழுந்து, தன்னை போஷித்துக் கொள்ள துடித்து எழுவதையும் கண்டேன். இந்த கொடிய சுயத்தை தேவனுடைய கூர்வாள் அழித்து,

அதனிமித்தம் வெளிப்படும் சொல்லி முடியா பரலோகத்தின் பொக்கிஷத்தை, என் கண்களுக்கு மறைத்திட முயற்சிப்பதையும் கண்டேன். எனக்குள் போராடும் இந்த சுயத்தின் தந்திர வஞ்சகத்தை என் நேசரின் கண்கள் ஊடுருவக் கண்டு, அந்த சுயத்தை வெளியே இழுத்து, சிலுவையில் அறையப்பட எனக்கு உதவி செய்தார்! "என் மேய்ப்பரே, உமது சுபாவத்தை எனக்குள் தந்திட, நீர் காண்பிக்கும் உமது சிலுவை வழிக்கு ஸ்தோத்திரம்! உமது அன்பின் சிலுவைக்கு நன்றி. அதோடு, என்னை தேற்றிடும் உமது கோலும் உமது தடியும் எனக்கு தவறாமல் தந்து ஆதரிக்கிறீரே! **அந்த ஒரு ஆறுதலே எனக்குப் போதும்!** என் நல்ல மேய்ப்பரே உமக்கு நன்றி" என உள்ளம் பொங்கி என் நன்றியைத் தெரிவித்தேன்.

– மேடம் குயான்

---

## கிறிஸ்தவ பெயரில் 'கிறிஸ்து இல்லாதிருப்பது' நியாயமா?

**எ**ன் பெற்றோர் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்தபோது, இராமசாமி என்ற என் தந்தையின் பெயரை சுவாமிதாஸ் எனவும், என் தாய் பேச்சியம்மையின் பெயரை ஞானம்மாள் என்றும் அறிவித்து ஞானஸ்நானம் பெற்றார்கள்! இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட என் முகத்தை கூர்ந்து பார்த்த அந்த பக்தியான போதகர் எனக்கு "**பரமானந்தம்**" என பெயர் சூட்டி ஞானஸ்நானம் கொடுத்தார்கள்! வேதாகமத்தில் ஏராளமான பரிசுத்தவான்கள் பெயர் இருந்தும், அவைகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் பரமானந்தம் என்னும் பெயரைக் கொடுத்தது தேவச் செயலாக இருக்கிறது. 'நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு நாமம் தரித்தேன்' என்கிறார் (ஏசாயா.45:4). ஏறக்குறைய எனக்கு 80 வருஷங்களுக்கு முன்பே பரமானந்தம் என்னும் பெயர் அபூர்வம்.

**போதகர் எனக்குப் பரமானந்தம் என்னும் பேரிட்ட போதிலும், எனது 23 வயதுவரை நான் உலகானந்தமாகவே பிழைத்தேன். 1897 ல் கர்த்தர் என்னைச் சொந்தமாக்கினபோதுதான், பரமானந்தம் என்னும் பேர் என்னில் நிறைவேறினது!**

பெரிய கன்வென்ஷன் கூட்டங்களில் நான் பேசுவதைக் கேட்பவர்கள்: அவர் பேரும் பரமானந்தம், பிரசங்கமும் பரமானந்தமாயிருக்கிறதே என்று பேசிக்கொண்டு போவார்கள். அதன் பின்பு, அநேக சபைகளில் பெற்றார் தங்கள் பிள்ளைகளுக்கு பரமானந்தம் என்று பேர் கொடுத்திருப்பதையும் நான் அறிந்தேன்! ஓர்

காலத்தில் அபூர்வமாயிருந்த பேர் இக்காலத்தில் எங்கும் பரவியிருப்பது சந்தோஷம். ஆனால், கிறிஸ்தவர்களில் அநேகர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அருமையான பெயர்களுக்கு நேர்விரோதமாய் நடப்பது விசனமான காரியமல்லவா? நோயாளியாகப் படுத்திருப்ப வனுக்கு ஆரோக்கியசாமி என்று பேர் இருப்பதும், பிச்சை எடுத்துப் பிழைப்பவனுக்கு சக்கரவர்த்தி என்று பேர் இருப்பதும், சர்வ முட்டாளுக்கு ஞானப்பிரகாசம் என்று பேர் இருப்பதும் வேடிக்கையல்லவா? வேதாகமத்தில் பெயரும் குணமும் ஒத்திருப்பதைக் காண்கிறோம். அந்தந்தச் சந்தர்ப்பத்தையும் அனுபவத்தையும் கவனித்து பேரிட்டார்கள்.

**பெற்றார் தங்கள் மக்களுக்கு நல்ல பெயர்களைத் தெரிந்துகொள்கிறார்கள். ஆனால், மக்களுடைய நடக்கையோ நேர்விரோதமாக இருப்பதைக் காண்கிறோம். பரிசுத்தவான்களின் பெயர்களைத் தரித்துக் கொண்டவர்கள் பேயின் மக்களாக நடப்பது எவ்வளவு சஞ்சலம்!**

அன்புடையானிடத்தில் அன்பையும், சாந்தம்மாளிடம் சாந்தத்தையும், கிறிஸ்துதாஸிடம் கிறிஸ்துவின் சாயலையும், தேவ கிருபையிடம் இரக்கச் சிந்தையையும் காண்பது எவ்வளவோ சந்தோஷம்! நமது பெயருக்கேற்றபடி நம் ஜீவியம் மாறும்படி, ஆண்டவர் கிருபை செய்வாராக!

– *பரமானந்தம் ஐயர்*

---

## இன்று, பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுங்கள்!

**ப**ரிசுத்தாவியினால் நிரப்பப்படுவதற்கு முன்பு, பரிசுத்தாவியின் மீது மிகப்பெரிய தாகம் வேண்டும்! மெய்யாகவே, உங்களுக்குச் சொந்தமான எதைக்காட்டிலும், பரத்திலிருந்து வரும் தூய ஆவியின் நிறைவு எனக்கு வேண்டும்? என்றதோர் தாகம் உங்களுக்கு உண்டோ? நீங்கள் தவித்த அந்த ஆவியானவர், உங்களை நிறைத்து விட்டால், உங்கள் முழு ஜீவியத்தையும் அவரே ஆண்டு பொறுப்பெடுத்து நடத்துவார்! அதாவது, உங்கள் ஆத்துமாவிற்கு நீங்களாகவே வைத்திருக்கும் பாதைக்களுக்குரிய எல்லா திறவுகோல்களையும், பரிசுத்தாவியிடம் ஒப்படைத்து விடுவீர்கள்!

**யார் பரிசுத்தாவியின் மீது மெய்யான தாகம் கொண்டவர்கள்? ஐயோ, நான் என் செய்வேன்? இந்த வேளையில் ஆவிக்குரிய கனியாகிய பொறுமை எனக்கு இல்லையே? இச்சையடக்கம் எனக்கு இல்லையே? என தவிக்கிறீர்களோ? ஐயோ, என் பொருளாசையை நான் ஜெயித்திருக்க வேண்டுமே? என் பாலிய இச்சையை மேற்கொண்டிருக்க வேண்டுமே? என்**

**கோபம் - ஆத்திரங்கள் ஒழித்திருக்க வேண்டுமே? இவ்வாறு நீங்கள் ஜெயத்தை விரும்பியும் அந்த ஜெயம் உங்களுக்கு கிட்டவில்லையோ? நீங்கள்தான் மெய்யான தாகத்துக்குரியவர்கள்!**

*"என் சகோதரனே விரைந்து வா! தேவன் உனக்கென்றே அந்த விசேஷித்த பரிசுத்தாவி வரத்தை வைத்திருக்கிறார்" என்றே உங்களை நான் வருந்தி அழைக்கிறேன்!*

*பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெறுவதற்கு ஆயத்தமுடன் உங்கள் தனி அறைக்குச் சென்று, நான் சொல்லுகிறதை நிஜமாய் அப்பியாசப்படுத்துங்கள். ஆயத்தமாகிவிட்டீர்களா? 1) இப்போது முதல் படியாய், உங்கள் முழு சரீரத்தையும் ரோமர்.12:1,2 வசனங்கள் கூறுகிறபடி முகங்குப்புற சாஷ்டாங்கமாய் தரையில் கிடத்துங்கள்!* **அவர் நிறைத்திட விரும்பும் ஒரு சரீரம் இல்லாமல், எப்படி உங்களை நிறைப்பார்?** *உங்கள் சரீரத்திலுள்ள அனைத்து விருப்பங்களும் கிரியைகளும் நோக்கங்களும் திட்டங்களும்* **ஆகிய உங்கள் யாவும்** *அவருக்கு முன் கிடத்தப்பட்டு விட்டதா? 2) இப்போது, இரண்டாவது செயலாற்றத்திற்கு வாருங்கள். எந்த கேள்வி எழும்பும் எண்ணங்களுக்கும் இடம் தராமல், தேவன் உங்களிடத்தில் விரும்புகிற 'பரிசுத்தாவியை கேளுங்கள்!' முதல் பகுதியை செய்யாமல், இரண்டாவது பகுதியின் 'அவரிடம் பரிசுத்தாவி கேட்கும் உரிமை இல்லை!' ஆனால், முதல் பகுதியை நிறைவேற்றிய உங்களிடமே 'அவரிடம் கேட்கும்படி' அவர் உங்களிடம் எதிர்பார்க்கிறார். இப்போது உளமாற கேளுங்கள்! 3) மூன்றாவது பகுதி என்னவென்றால், தனக்கு முழுவதும் கீழ்படிகின்ற யாவருக்கும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை தேவன் தந்துவிடுவார்! என அப்போஸ்தலர்.5:32 கூறுகிறது.*

*வேறு எதை அவர் கேட்டார்? அவருடைய வசனங்களுக்கு கீழ்படிய* **உங்களுக்கு மனதிருந்தால்,** *அதுபோதுமே! வேறு எதுவுமே அவர் உங்களிடத்தில் கேட்கவில்லையே! வேத வசனத்தை கைக்கொண்டு வாழ்வது பெரு மகிழ்ச்சி அல்லவா? இப்போது உங்களுக்கு என்ன நடக்கும் தெரியுமா? பரிசுத்தாவியானவர் உங்கள் மீது பொழிந்து, புறா வடிவில் உங்கள் ஆத்துமாவில் அமர்ந்து, ஜீவ நதியாக உங்கள் இருதயத்திலிருந்து பாய்ந்து செல்வார்! இன்று முதல், பரிசுத்தாவியானவர் என்றும் தங்கும் இல்லமாக உங்கள் ஜீவியம் இருப்பதாக, என்றே வாழ்த்துகிறேன்! ஆமென்.*

*– A.W. டோசர்*

## “இலக்கை அடைந்ததும் துன்பங்கள் ஓய்ந்துவிடும்!”

இந்த உலகில் வேதனையும், துன்பமும் ஏராளமாய் இருக்கிறதே? அது ஏன்? என என்னிடம் வியந்து கேட்டவர்கள் பலர். உசிதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரமே இதற்குரிய விடை தெரியும். ஏனென்றால், “இந்த உலகத்திலுள்ள பாடுகளும் துன்பங்களும்” மற்ற எவரும் அறிந்து கொள்ள முடியாத ஓர் இரகசியமாகவே உள்ளது!

தன்னுடைய ஆத்துமாவை, தன் சிருஷ்டி கர்த்தாவிடம் தத்தம் செய்துவிட்ட யாவருடைய ஜீவியத்திலும் ஏற்படும், எல்லா துன்பங்களையும் தேவன் பயன்படுத்தி ‘அவருடைய இனிய சமூகத்திற்குள் அவர்கள் பிரவேசிக்கும் பாக்கியத்தை’ அருளியிருக்கிறார்! இவ்வாறு, தம்முடையவர்களுக்கு நன்மை பயக்கும்படி, வேதனைகளையும், துன்பங்களையும் கொண்டு தேவன் கிரியை செய்ய முடியாவிட்டால்..... இந்த உலகில், வேதனைகளும் துன்பங்களும் சம்பவிக்க தேவன் அனுமதித்திருக்க மாட்டார்!

**சிருஷ்டி கர்த்தா தம்முடையவர்களை ‘கோதுமை மணி என்றே’ அழைக்கிறார். நாம் எல்லோரும் புரிந்துகொள்ளும்படி “அந்த கோதுமை மணி” பூமியின் திக்கற்ற இருளுக்குள் இருந்தால் மாத்திரமே, வெளிச்சமான சூரிய பிரகாச ஒளிக்குள் உயிர்த்து பிழைத்து தலை நிமிர்ந்து நிற்க முடியும். இப்போது, அந்த கோதுமை மணி ஒரு ஆரோக்கியமான செடியாய் வளர்ந்து மிகுந்த பலன் தருகிறதல்லவா! (யோவான்.12:24).**

முதலாம் உலக மகா யுத்தத்தில் தோண்டப்பட்ட ‘பதுங்கு குழி’ இப்போது பூக்களும் கனிகளும், மணம் வீசி விளையும் செடிகள் கொண்ட குழிகளாய் மாறிவிட்டது. அது ஏன்? மேல்பரப்பைக் காட்டிலும், ஆழமான மண் படிவமே அதிக உரம் கொண்டதாய் இருக்கிறது. ஆகவே, நாம் துன்பங்களை சந்திக்கும்போது, ஆழத்தில் உள்ள ஆத்துமாவின் மறைவான ஐசுவரியங்கள் வெளிச்சத்தில் மலர்கிறது! இதனிமித்தமே **அழிவு போல் தோன்றும் துன்பத்தை** மேலோட்டமாய் கண்டு நாம் ஒருபோதும் மனகிலேசம் அடைந்து விடக்கூடாது!

**துன்பங்கள் நமக்குள் கிரியை செய்யும்போது மாத்திரமே, ஆத்துமாவில் மறைந்திருக்கும் வியக்கத்தகு வல்லமை பயனுடையதாய் பரிமளிக்கும்!**

‘கடுக்காய்’ கொட்டை நம் யாவருக்கும் தெரியும். அதன் வெளித்தோல் கரடுமுரடாயும் கசப்பாயும் இருக்கும். ஆனால், உள்ளே

இருக்கும் பழமோ 'தித்திப்பாய்' இருக்கும். இந்த உலகத்திலுள்ள பாடுகளை நாம் முதலாவதாக சந்திக்கும் போது, வருத்தம் தருவதாய் இருக்கும். ஆனால் 'சிருஷ்டி கர்த்தாவின் சார்பில்' அந்த உபத்திரவங்களை நாம் ஏற்றுக்கொள்ளும் போது, அந்த உபத்திரவங்களுக்குள் "திவ்வியமான ஆவிக்குரிய சமாதானம்" நிறைந்து பொங்குவதை அனுபவித்திட முடியும். **'துன்பங்களிலிருந்து தப்பிப்பது' உண்மையான ஜெயம் அல்ல!** அதற்கு மாறாக, சகலத்தையும் மாற்ற வல்ல 'தெய்வ கிருபையை' நாம் கண்டடைந்து விட்டால்.... அதுவே, நம் துன்பங்களை இனிய தெய்வ சமூகத்திற்கும், மரணத்தை ஜீவனுக்குள்ளும், தீமையை நன்மையாகவும் மாற்றி மலரச் செய்துவிடும்!

"தேவன் தங்களை, நித்திய வீட்டிற்கு, ஆயத்தப்படுத்தி கொண்டிருக்கிறார்!" என்று விசுவாசிப்பவர்கள் மாத்திரமே 'ஆவிக்குரிய போராட்டங்களில்' துணிவுடன் முன்னேறிச் செல்வார்கள். ஆனால், இந்த உலகத்தை தங்கள் இலக்காய் கொண்டவர்களுக்கு, துன்பங்கள், அவர்களிடம் தேங்கி நிற்கும் ஒன்றாகவே, அவர்கள் வாழ்வை மங்கி இருள வைக்கிறது!

ஆனால், நித்தியவாசிகளுக்கோ, வேதனையின் அனுபவங்கள் "ஆறுதலின் ஆசீர்வாதங்களாய்" மாறுவதை காண்பார்கள்! கசப்பின் பாதையில் சென்றவர்களே, மதுரத்தின் மாட்சியை ருசிப்பார்கள்! தீமையை நேர்கொண்டு சந்தித்தவர்கள் மாத்திரமே, நன்மையின் விலைகொள்ளா மதிப்பை அறிந்திருப்பார்கள். **ஜீவனின் மகத்துவ மதிப்பை** மரணத்தின் பாதையை கடந்து வந்தவர்கள் மாத்திரமே அறிவார்கள்!

இந்த உலகில் உள்ள நஷ்டங்களும், தீங்கும் நிறைந்த வாழ்க்கை மாத்திரமே, நம் ஆவியை ஜீவனோடு விழித்திருக்கச் செய்திட முடியும்! மேலும், இந்த மாய உலகம் தாராளமாய் வழங்கும் கவர்ச்சியான இன்பங்களை, நாம் ஆறுதலென்று தழுவி, அதனிமித்தம், மெய்யான இலக்கை நாம் இழந்துப் போகாதிருக்கவும் **இவ்வுலக அற்பகால துன்பங்கள்** நமக்கு உதவி செய்கின்றன!

இப்போது காரியத்தின் கடைத்தொகை இதுதான்: துன்பத்தின் வழியாய் மகிழ்வுடன் சிலுவை ஏற்கும் இயேசுவின் அன்பின் சீஷர்களாகிய நாம், பூரண ஆவிக்குரிய சௌபாக்கியத்தை கண்டடைந்ததும், இந்த பூவுலக துன்பங்கள் ஓய்ந்து விடும்! ஆமென்.

– சாது சுந்தர்சிங்

## பிசாசை எதிர்த்து நின்று, கிறிஸ்தியான் ஜெயம் பெற்றான்!

**ஞா**ன சகோதரி, ஒரு ஆயூதசாலைக்கு கிறிஸ்தியானை அழைத்துச் சென்றாள். அங்கே அவன் சர்வாயுதவர்க்கத்தாலும், தன்னை தரித்துக் கொண்டான். அவன் தலையை, ஓர் தலைகவசத்தால் அணிந்து கொண்டான். அவன் பாதத்தை வலிமையான இரும்பு போன்ற பாதரட்சையால் தொடுத்துக்கொண்டான். மார்பு கவசத்தை அணிந்து கொண்டான். மார்பு கவசமானது, **சத்துருவின் எந்த தாக்குதலையும்** எதிர்கொண்டு, அவனை பாதுகாப்பதாய் இருந்தது! பின்பு, வேதவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொண்டான்.... அதுவே, **சாத்தானுக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு** உதவுவதாய் இருந்தது! இதுதான், ஒரு சபையினுடைய ஊழியமாயும் இருக்கிறது!

ஏனெனில், கிறிஸ்தியான் பிரவேசித்த அரண்மனை, ஒரு ஸ்தல சபையை சித்தரிப்பதாகும். **அந்த உத்தமமான சபையில்,** ஜனங்கள் சத்துருவை எதிர்த்து நிற்கும் திராணியாகிய 'சர்வாயுதவர்க்கத்தையும்' பெற்றுக் கொள்ளவே ஊழியம் செய்கிறார்கள்! அதன் மூலமாய், அந்த வாரம் முழுவதும் உலகத்தில் அவர்கள் சந்திக்கும் சத்துருவின் எதிர்ப்புகளை எதிர்கொண்டு செல்வதற்கு, சபையின் மூலமாய் பெலன் அடைகிறார்கள்!

சர்வாயுதவர்க்கத்தையும் அணிந்த கிறிஸ்தியான் ஒரு பெரிய பள்ளத்தாக்கிற்குள் பிரவேசித்தான். அந்த பள்ளத்தாக்கு சிறுமைப் படுவதும், ஏராளமான பாடுகளும் நிறைந்த பள்ளத்தாக்காயிருந்தது. உள்ளே பிரவேசித்த கிறிஸ்தியானை **'அப்பெல்லியோன்' என்ற பிசாசு** கிறிஸ்தியானை பயங்கரமாய் தாக்க வந்தான். அவ்வளவு பெரிய பிசாசை கண்ட மாத்திரத்தில், கிறிஸ்தியான் சற்று தடுமாறி நின்றான். ஏனெனில் இதுபோன்ற எதிரியையும், யுத்தத்தையும் தன் வாழ்க்கையில் முன்பு அவன் எதிர்கொண்டதில்லை! பின்பு விழிப்படைந்த கிறிஸ்தியான், சாத்தானை எதிர்க்க வல்லஆயுதமாகிய பட்டயத்தை உறுதியாக பிடித்துக் கொண்டான். அந்த பட்டயத்திற்கு பெயர் 'தேவனுடைய வார்த்தை!' இயேசுவையும், பிசாசானவன் இவ்விதமாய் தாக்க முயன்றபோது, ஆவியின் பட்டயமாகிய இந்த வேதவசனத்தை மாத்திரமே உறுதியாக பிடித்து நின்றார். அவனைப் பார்த்து "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல....." என எழுதப்பட்ட வசனத்தையும், "உன் தேவனாகிய கர்த்தரை சோதித்துப் பாராதிருப்பாயாக" என எழுதப்பட்ட வசனத்தையும், "உன்

*தேவனாகிய கர்த்தர் ஒருவரையே ஆராதிப்பாயாக" என எழுதப்பட்ட வசனத்தையும் ....*

**இவ்வாறு, சாத்தானை எதிர்கொண்ட ஒவ்வொரு நேரத்திலும் எழுதப்பட்ட தேவனுடைய வசனத்தை வைத்தே ஆவியின் பட்டயத்தால் பிசாசானவனை இயேசு தாக்கினார்! பிசாசானவன் அவரிடம் தோற்றுப் போய் ஓடிவிட்டான்!**

*ஏனென்றால், இயேசு கிறிஸ்து "வேத வசனத்தின்" பட்டயத்தை உபயோகித்தார்.... அவ்வளவுதான். இதுவே நம் யாவருக்கும் ஓர் நல்ல மாதிரி! வேத வசனத்தை மனதில் வைத்திருப்பதும், அதை சாத்தானுக்கு விரோதமாக பயன்படுத்தி தாக்குவதுமே* **நமது ஜெயம்!** *சாத்தானின் எதிர்ப்புகள் எவ்வளவு இருந்தாலும்.... தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது "தேவன் எனது இரட்சகர்!" மற்றொரு தாக்குதலில், தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது "என் பாவங்களை இனியும் ஒருபோதும் மீண்டும் நினைத்திட மாட்டார்!" மற்றொரு தாக்குதலில் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது "அவர் என்னைவிட்டு விலகுவதுமில்லை என்னை கைவிடுவதுமில்லை!".... இவ்வாறாக, வேத வசனத்தை நாம் பயன்படுத்தும்போது, நாம் பயந்திட மாட்டோம்..... ஜெயித்து வாழ்வோம்!*

*இதனிமித்தமே, நாம் வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்து வைத்திருப்பது நல்லது! வேத வாக்கியங்களில் உள்ள, ஆச்சரியமான வாக்குதத்தங்களை, நம் மனதில் ஏராளமாய் வைத்திருக்க வேண்டும்! அதுபோலவே* **விசுவாசம் என்னும் கேடகம்** *"தேவன் உன்னை நேசிக்கவில்லை" என கொண்டு வரும் சூழ்நிலை அவிசுவாசத்தை ஜெயம் கொள்கிறது! விசுவாச கேடகத்தைப் பிடித்த நீங்களோ "அப்படி இல்லை, தேவன் மெய்யாகவே என்னை நேசிக்கிறார்!" என விசுவாச கேடகத்தை உறுதியாக பற்றிக்கொண்டு, நாம் சாத்தானை ஜெயிக்கிறோம்!*

**எத்தனையோ அவிசுவாசமான எண்ணங்கள் நம்மைத் தாக்கி "உனக்கு கேன்சர் வந்துவிடும்! நடுரோட்டில் உனக்கு விபத்து ஏற்பட்டுவிடும்!....." போன்ற சிந்தை வரும் நேரங்களில் "என் வாழ்வில் சம்பவிக்கும் சிறுசிறு விஷயங்களையும் தேவன் அறிந்திருக்கிறார்" என யோபு.23:10 வசனத்தைக் கூறி, விசுவாச கேடகத்தை உறுதியாகப் பிடித்து அவனை ஜெயித்திட வேண்டும்!**

*யுத்தத்தில் நின்ற கிறிஸ்தியானுக்கு, எல்லா போர்களிலும் நடப்பதைப்போலவே, சில காயங்கள் ஏற்பட்டது. ஏனெனில்,*

*கிறிஸ்தியான் அப்பொல்லியோன் பிசாசிடம் ஆறு மணி நேரங்கள் நின்று போராடினான். நீண்ட யுத்தத்தால் கிறிஸ்தியான் சோர்ந்து போய்..... கடைசியாக உரத்த சத்தமிட்டு "இவை எல்லாவற்றிலும் கிறிஸ்து இயேசுவுக்குள் என்னை முற்றிலும் ஜெயம் பெறச்செய்திடும் என்னை அன்புகூர்ந்த தேவன்" (ரோமர்.8:37) எனக்கூற, இந்த வசனத்தை அப்பொல்லியோன் கேட்டவுடன், தன் வாலை சுருட்டிக்கொண்டு, திரும்பித் தோற்று ஓடிவிட்டான்! ஏனெனில், வேதம் அவ்வாறாகவே "பிசாசை எதிர்த்து நில்லுங்கள், அவன் உங்களைவிட்டு ஓடிப் போவான்!" என்றே கூறுகிறது. ஆம், அவன் உங்களை விட்டு நடந்து அல்ல, ஓடிப்போவான் என்றுகூட இல்லை.... ஆங்கில வேதாகமம் கூறுகிறபடி உங்களைவிட்டு பறந்தே போய் விடுவான்!*

*– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)*

---

## 'சாந்த குணத்தையல்லவோ' கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்!

*என் உள்ளத்தில் ஆழமாய் பதிந்த, மிக ரம்மியமும் மணமும் மிக்க தெய்வ சுபாவம் கிறிஸ்துவின் "சாந்த குணமே ஆகும்". அது வெளித்தோற்றத்தில் அல்ல.* **இருதயத்தில் வாசம் செய்யும் மாசில்லாத சம்பத்து** *என மத்தேயு.11:29 - ம் வசனத்தில் இயேசு போதித்துள்ளார்!*

*இதுபோன்ற நற்பண்பை நான் மனதார நேசித்து, வாழ்ந்து காண்பித்த போதும், ஆசிரமத்து சகோதரிகளில் அநேகர் அந்த காருண்யத்தை பெற்றுக்கொள்ளாமல், சண்டையும் கூக்குரலும் கொண்டவர்களாய் என்னிடத்தில் "பிரச்சனை என வருவதை காண்பது" என் உள்ளத்திற்கு வெகுவான துக்கத்தை கொண்டு வரும். அதுபோன்ற நேரங்களில், என் உள்ளம் பதறி அவர்களின் குறைகளை கேட்பேன். ஆசிரமத்து ஒரு பெண்ணிடம் மற்றொரு பெண் என்ன ஆத்திரம் கொண்டு பேசினாள்? என கேட்பேன். மற்றொரு பெண்ணிடமோ, இவள் என்ன பேசினாள்? என்றும் கேட்பேன்!*

*இவ்வாறு அவர்கள் இருவரும் பேசியதை மாறிமாறி நான் கேட்டு,* **இவள் இப்படியா? அவளும் இப்படித்தானா?** *என உள்ளம் நொந்து சஞ்சலம் அடைந்தேன். என்னுடைய ஓய்வு அறைக்குச் சென்ற போது அந்த பெண்ணின் கோபமான பேச்சும் மற்றொரு பெண்ணின் ஆத்திரமான வார்த்தைகளுமே என் மனதை நிறைத்திருந்தது. அவர்களை விட்டு நான் தனித்துச் சென்றபோது, இவர்கள் ஒருவருக்கொருவர் திட்டிய வார்த்தைகள் என் மனதிற்கு சஞ்சலத்தை கொண்டு வந்ததைப் பார்த்தேன்!*

“நான் ஜெபிக்கச் சென்ற வேளையில், பிறருடைய தீய வார்த்தைகளை விசாரித்து ‘அதை’ அறிந்து கொள்வதுதான் உன் ஊழியமா?” என என் உள்ளத்தில் ஆண்டவர் பேசினார். மேலும், அவர்களின் தீய வார்த்தைகளுக்கு, நான் ஒரு விளக்கத்தை கொடுத்து விட்டால், அதுவும் ஊழியமாகுமா? எனவும் ஆண்டவர் பேசினார்.

**இந்நிலையில் மத்தேயு.11-ல் இயேசு கூறிய ‘சாந்தகுணத்தை கற்றுக் கொடுக்கும் பங்கை’ நான் சிறிதுகூட செய்யவில்லை என்பதை உணர்ந்தேன். அவர்களின் குற்றங்களை நான் வீணாக அறிந்து கொண்டேன் என்பதும் என் உள்ளத்தை வருத்தியது!**

நான் செயல்பட வேண்டியது எல்லாம், அவர்கள் ஒவ்வொருவருக்கும், நான் பெற்ற சாந்தகுணத்தை அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்! என்பது ஒன்றையே, ஆவியானவர் காண்பித்தார்.

என் பிழை உணர்ந்தவளாய் மிகுந்த ஜெபத்துடன் அவர்களை மீண்டும் அழைத்து, என் இருதயத்தில் நான் பெற்றிருந்த சாந்த குணத்தை அவர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள அல்லது அவர்களும் அதை கற்றுக்கொள்ள, நொறுங்குண்ட இருதயத்தோடு முயற்சித்தேன்! **கல்வாரி அன்பு எனக்கில்லையோ?** என்ற ஆதங்கத்தோடு முயற்சித்தேன்! அல்லேலூயா, இப்போது அவர்கள் என் குடிலை விட்டு வெளியே நடந்து சென்றபோது ஒருவருக்கொருவர் புன்முறுவலோடு சென்றதைக் கண்டு மனதில் ஆறுதல் அடைந்தேன்!

– ஏமி கார்மைக்கேல்

---

## ஜெயித்து வாழ ‘தெய்வ அன்பின் தியானமே’ வலிது!

“**தே**வையானது ஒன்றே” என மார்த்தாளிடம், இயேசுவின் பாதத்தில் அமர்ந்த மரியாளின் **அன்பின் தியானத்தை** இயேசு சுட்டிக்காட்டினார்! (லூக்கா.10:41). இயேசு இவ்வாறு கூறியதினிமித்தம் விசுவாசம், தேவ கிருபை, அபிஷேக வல்லமை.... ஆகிய தேவபக்திக்குரியவைகளை ‘தேவையற்ற மற்றவைகள்’ என நாம் எண்ணிடக்கூடாது! ஆகிலும் “இயேசுவின் மீது கொண்ட அன்பின் தியானத்திற்கு உட்பட்டே” மற்ற அனைத்தும் இருக்கிறது என நாம் அறிவதே நலம்! அது, “**சத்தியம்** உங்களை விடுதலை யாக்கும்” என்பதைக் காட்டிலும் “**இயேசு** விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்!” என்பதற்கு இடையே காணும் வித்தியாசமாகும்! ஆம், நாம் பாவத்தையும், சுயத்தையும், இந்த உலகத்தையும் ஜெயித்து வாழ்ந்திட அளிக்கும் ஒப்பற்ற வல்லமை **“தெய்வ சினேகத்திற்கே” உண்டு.....** அதுவே அந்த “தேவையான ஒன்று”

என இயேசு போற்றி மகிழ்ந்தார்! **அந்த 'நல்ல பங்கை'** மரியாள் பெற்றாள்..... அதையே நாமும் பெற்றிட வேண்டும்!!


பேதுரு மறுதலித்ததைவிட, அவன் "எதைக் காட்டிலும் இயேசுவை அதிகமாய் அன்புகூர வேண்டும்!" என்பதையே இயேசு விரும்பினார்! 153 - பெரிய மீன்கள் நிறைந்த படகைக் காட்டி, "இதைக் காட்டிலும் அதிகமாய் நீ என்னை அன்பு கூருகிறாயா?" என்று கேட்டவுடன்.... பேதுரு மனம் உடைந்து "ஆம் ஆண்டவரே, அவ்வாறே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்!" என மனம் நெகிழ்ந்தான்! (யோவான்.21:11,15). **முதலாவதாக,** ஒரு சீஷனாய் இயேசுவைப் பின்பற்றும்படி விட்டுவந்த 'படகு நிறைய மீன்களை விட' (லூக்கா.5:6,11), இப்போது **இரண்டாவதாக** விட்டுவந்த 'படகின் மீன்கள்' பன்மடங்கு லாபம் கொண்டது! பாருங்கள், இயேசுவின் மீது அன்புகொண்ட சீஷத்துவம், இவ்வாறு படகு 1, படகு 2, ..... என ஜீவ காலமெல்லாம் சோதிக்கப்படுகிறது! அந்தோ, இயேசுவின் மீது கொண்ட அன்பின் தியானத்தை, முதலாவது படகு, இரண்டாவது படகு..... என மறுத்தவர்களில் பலர், படகு 4 அல்லது படகு 5 - ல் "இயேசுவின் அன்பை" விட்டுவிட்டு, உலக லாபத்திற்குப் பின் சென்று விடுகிறார்கள்!

பாவத்தையும், சுயத்தையும் இயேசுவைப்போல், ஜெயித்து வாழ **தெய்வ "நேசமே வலிது!"** என்ற இரகசியத்தை நாம் அறிந்து கொள்வோமாக! (உன்னத.8:6). இந்த உலக மோகத்தின் திரண்ட வெள்ளம் போன்ற சோதனைகள், இந்த அன்பின் வலிமையை அழித்திட முடிவதில்லை!

**மெய்யான ஜெயவாழ்விற்கும், அவரது ஊழியத்திற்கும், கிறிஸ்துவின் சரீரமான சபை கட்டப்படுவதற்கும்..... மற்றும், அனைத்திற்கும் இயேசுவின் மீது கொண்ட "தெய்வ அன்பின் தியானமே" வலிமை கொண்டது!**

ரோமர்.8:28 குறிப்பிடும் "**தேவனிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்கே**" தேவன் சகலத்தையும் நன்மைக்கென்று செய்து முடிக்கிறார்! ஆம், இயேசுவுக்கு அவரது மரணத்தையும் ஜீவனாய் மாற்றி அவரை உயிர்ப்பித்ததைப்போல! இவ்வாறு அவரை முழு இருதயமாய் நேசிக்கும் தியானமே வலிமையானது என கண்டவர்கள் மாத்திரமே, இன்னும் அதிக வலிமை கொண்டதாய் "**எங்களை அன்புகூருகிற வராலே**" முற்றிலும் ஜெயம் பெறுகிறோம்! என்ற மேன்மையை ரோமர்.8:37-ல் வாசித்து, அவரது அன்பை கொண்டாடும் பாக்கியம் அடைவார்கள்! இந்த பாக்கியமே, நம் யாவருக்கும் உண்டாவதாக!

– T.ரத்தினகுமார்



# இயேசுவின் சீஷன் பேதுரு,

## "தலைகீழாய் சிலுவையில் அறையுண்டு" சாட்சியானார்!

(AD 65)

நசரேயனாகிய இயேசுவைப் பின்பற்றிய அனைவருக்கும் எருசலேமில் ஏராளமான துன்பங்கள் காத்திருந்தது. அநேகர் துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். யோவானின் சகோதரனாகிய யாக்கோபு கைது செய்யப்பட்டு, எந்த விசாரணையும் இல்லாமல் அவரது தலை வெட்டப்பட்டது எனக் கேள்வியுற்ற விசுவாசிகள் மனம் பதறினார்கள்.

தங்களை முன்நின்று நடத்திய பேதுரு அப்போஸ்தலனும் கைது செய்யப்பட்டு, ஒரு சிறிய சிறைக்கூடத்தில் சங்கிலியினால் கட்டப்பட்டு அடைபட்டு இருக்கும் செய்தி வேகமாய் பரவியது. யாக்கோபைப் போல் அல்லாமல், பஸ்கா பண்டிகைக்குப் பிறகு பேதுருவை கொன்றுவிட தீர்மானித்திருந்தார்கள். இந்த செய்தியை கேட்ட சபை விசுவாசிகள் 'உள்ளம் பதைத்து' பேதுருவின் விடுதலைக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். அந்த ஜெபத்தின் விளைவாய், பேதுரு கொலை செய்யப்படுவதற்கு முந்தின இரவு கர்த்தருடைய தூதன் ஒருவன், பேதுருவை அற்புதமாய் விடுதலை செய்தான்! சபையின் வாசல் கதவை தட்டிய பேதுருவுக்கு, கதவை திறந்த சபை மக்கள் பேரானந்தம் கொண்டார்கள்!! ஏரோது மரித்த உடன், எருசலேம் சபையில் பேதுரு தொடர்ந்து அப்போஸ்தலனாய் ஊழியம் செய்து வந்தார்.

காலங்கள் கடந்து, பேதுரு ரோமாபுரி சென்று ஊழியம் செய்வதற்கு பயணித்தார். தள்ளாடிய வயதைக் கொண்ட பேதுருவை நீரோ மன்னன் கொலை செய்ய வகை தேடினான். அதை அறிந்த சபையிலுள்ள சீஷர்கள் "பேதுருவை தப்பி ஓடும்படி" கூறினார்கள். சற்று தடுமாறிய பேதுரு, தப்பி ஓடுவதற்கு எருசலேம் வாசலுக்கு வந்து விட்டார். அந்நேரத்தில் திடீரென்று இயேசு எருசலேமிற்கு உள்ளாக போவதைக் கண்டு திகைத்தார். உள்ளம் நடுங்க "குருவே நீர் எங்கே செல்கிறீர்?" என அவர் கேட்க, அதற்கு இயேசு "நான் மீண்டும் சிலுவையில் அறையப்பட போகிறேன்" எனக்கூறி மறைந்தார். யோவான்.21:19-ம் வசனத்தில் இயேசு பேதுருவைக் குறித்து உரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் பொருட்டு, தப்பி ஓடும் எண்ணத்தை விட்டுவிட்டு, மீண்டும் எருசலேமிற்கு திரும்பிச் சென்றார். அடுத்து என்ன? அவரை சிலுவையில் அறைய ரோம போர் வீரர்கள் இழுத்துச் சென்றார்கள். தண்டனை நிறைவேற்ற வந்த வீரர்களிடம் "என் இரட்சகர் மரித்தது போன்ற சிலுவையில் நானும் மரித்திட தகுதி அற்றவன்..... என்னை தலைகீழாக அறையுங்கள்" என கூறியதும், அவ்வாறே ரோம வீரர்கள் அவரை தலைகீழாய் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## மனந்திரும்பும் வாலிபனுக்கு 'விசுவாச தைரியம்' வேண்டும்!

கர்த்தர் என்னைச் சந்தித்து இந்து மார்க்கத்திலிருந்து தம்முடைய சொந்தப் பிள்ளையாக என்னை மாற்றினார். ஞாயிற்றுக்கிழமைகளில் நான் ஆலயம் சென்று ஆண்டவரை நான் தொழுது கொள்ளப் பெருந்தடைகளை என் பெற்றோர் எனக்குக் கொடுப்பதில்லை. அதின் காரணம் என்னவெனில், சினிமாவுக்குச் சென்று கெட்டழியாமல் ஒரு நல்ல இடத்திற்குத்தானே மகன் செல்லுகின்றான் என்ற எண்ணத்தில் என்னை சபைக்குச் செல்ல அனுமதித்தார்கள்.

இப்பொழுதோ, எனக்கு ஒரு பெரிய கண்ணீரின் சோதனை! எங்கள் பூர்வீக குல தேவதைக்கு தலைச்சவரம் செய்ய பெற்றோரும், என் அண்ணன்மார்களும் கடுமையாக நிர்ப்பந்தித்தார்கள். நான் அதனைச் செய்ய முடியாது என்று கண்டிப்பாக மறுத்து நின்றேன். ஆனால் அவர்களோ, அப்படியானால் "உன்னை வீட்டை விட்டுத் துரத்திவிடுவோம்" என்றார்கள். நானோ 12-ம் வகுப்பு படித்து வந்தேன். என்னைத் தெரிந்து கொண்ட என் ஆண்டவருக்கு விசுவாச துரோகம் நடந்துவிடக் கூடாதே என மனம் அங்கலாய்த்தேன்.

எவ்வளவோ முயன்றும் என் பெற்றோரின் செயலிலிருந்து நழுவிச்செல்ல இயலவே இல்லை. கடைசியாக, என்னை குலதெய்வ கோயிலில் வற்புறுத்தி என்னை நிறுத்தி விட்டார்கள்!

நாவிதன் என் தலைமுடியைச் சிரைத்துத் தரையில் போடப் போட கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என்று நல்ல சத்தமாகவே சொன்னேன்.

அதோடு சரி, "கிறிஸ்தவ விசுவாசம் இவன் இரத்தத்தில் கலந்துவிட்டது" என என்னை விட்டுவிட்டார்கள். இப்போது என் ஆண்டவரை மனதார அன்புகூர்ந்து பூஜிக்கிறேன்.

அவ்வப்போது என் வீட்டில் தடைகளும், பிரச்சனைகளும் ஏற்பட்டாலும், நானோ மிகுந்த தைரியத்தோடு 'என் சிலுவை சுமந்து' என் குருவை கெம்பீரமாய் பின்பற்றித் தொடருகிறேன்! அல்லேலூயா.

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.